உ
சிவமயம்



## காரைநகர் – சிதம்பராமூர்த்தி – கேணியடி

# திருவருள்மிகு ஞான வைரவப் பெருமான் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2019

**கர்மாரம்பம்**
**08.09.2019** (ஞாயிற்றுக்கிழமை)
காலை 7.00 மணி

**வைரவர் துதி**

எங்கு மெய் பொருளிலும் இருந்தருள் புரிந்திடும் இறைவனே சிவகுமாரா
எல்லை யில்லா இன்பவாரியே அருள் மழை இறைத்திடும் கருணை முகிலே
துங்கமுறு சிவனை மதியாத பிரமன் தலை துணித்தருள் செய்த முதலே
தோன்றாத துணையாய் இருந்தெமைக் காத்திடும் சூலாயுதக் கடவுளே
மங்குல்தவழ் சோலையாய் மருதமரம் ஆலரசு வானுறச் சூழ்ந்து மிளிரும்
வைப்பெனும் சிதம்பரா மூர்த்தித் திருக் கேணியடித் தலம் வைகி யடியார்
அங்கமுறு நோயன்றி ஆன்ம நோயுந் தவிர்த்தருள் வைத்திய நாதனே
அப்பனே வைரவ சுவாமியே எங்களை ஆதரித்தருள் ஐயனே.

**கும்பாபிஷேகம்**
**11.09.2019** (புதன்கிழமை)
காலை 6.35மணி - 7.25 மணிவரை

**மெய்யடியார்களே!**

ஸ்ரீமத் தெட்சண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற இலங்கை மணித் திருநாட்டின் வடபால் சிகரமாய் விளங்கும் யாழ்ப்பாண நகரின் மேற்குத் திசையில் சைவமும். தமிழும், கலை, கலாசாரமும், நிறைவான தெய்வீகத் தன்மை வாய்ந்த ஆலயங்களையும் தன்னகத்தே கொண்ட குபேர பூமியாம் காரை மாநகரிலே சிதம்பரா மூர்த்தி கேணியடியில் வீற்றிருந்து நம்மை எல்லாம் காத்தும், ரட்சித்தும் வருகின்ற ஞானவைரவப் பெருமானுக்கும் புதிதாய் அமையப் பெற்ற காளி அன்னைக்கும் நிகழும் மங்கலகரமான விகாரி வருடம் தெட்சணாயனமும் ஆவணித் திங்கள் 25ஆம் நாள் (11.09.2019) புதன்கிழமை காலை 6.35மணி - 7.25 மணிவரை வரும் கன்னி லக்கினமும் பூர்வ பக்ஷ் திரயோதசி திதியும் ஆவணி திருவோண நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப புண்ணியசுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் கூடியுள்ளது. ஆகவே அடியவர்கள் யாவரும் ஆசாரசீலர்களாக கும்பாபிஷேகக் கிரியைகளில் கலந்து தரிசித்து ஞான வைரவப் பெருமானின் அருள் பெற்று செல்வ யோகமிக்க பெருவாழ்வைப் பெறுவீர்களாக.

## கிரியாகால விபரம்

**ஆவணித் திங்கள் 22ஆம் நாள் (08.09.2019) ஞாயிற்றுக்கிழமை**

காலை : 7.00 மணி முதல் விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, திரவிய பூஜை, திரவியவிபாகம், கணபதி ஹோமம், லக்ஷ்மி ஹோமம், நவக்கிரக ஹோமம்.
மாலை : 5.00 மணி முதல் விநாயகர் வழிபாடு, சாந்தி வழிபாடு.

**ஆவணித் திங்கள் 23ஆம் நாள் (09.09.2019) திங்கட்கிழமை**

காலை : 7.00 மணி முதல் கணபதி பூஜை, நூதன மூர்த்தி அதிவாசக் கிரியைகள், சூரியாக்கினி, கங்கா தீர்த்தம், கோவாசம்
மாலை : 4.00 மணி முதல்விநாயகர் வழிபாடு, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்சணம், யாகபூஜை, கும்ப யாகசாலப் பிரவேசம், அக்னி உத்பாவனம்.
இரவு 8.00 மணிக்கு மேல் தீபஸ்தாபனம், விம்பஸ்தாபனம்.

**ஆவணித் திங்கள் 24ஆம் நாள் (10.09.2019) செவ்வாய்க்கிழமை**

காலை : 9.00 மணி முதல் விநாயகர் வழிபாடு,பூதசுத்தி யாகபூஜை, விஷேட திரவியஹோமம், தீபாராதனை வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம். மாலை : 5.00 மணி முதல் விநாயகர் வழிபாடு, பஞ்சாமிர்த, பஞ்சகவ்ய பூஜை, விம்பசுத்தி பூஜை, விம்ப ரக்ஷாபந்தனம், யாகபூஜை, ஹோமங்கள், பூர்வ பச்சிம சந்தானம், நியாசம், ஸ்பரிசாகுதி வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், குருமார் உபசாரம்.

**ஆவணித் திங்கள் 25ஆம் நாள் (11.09.2019) புதன்கிழமை**

காலை : 5.00 மணி முதல் விநாயகர் வழிபாட்டுடன் யாகபூஜை மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்காரம், வேத, ஸ்தோத்திரநிருத்த, திருமுறை பாராயணம், அந்தர்பலி, பகிர்பலி, கும்ப உத்தாபனம், சர்வமங்கல வாத்தியங்கள் ஒலிக்க கும்பங்கள் வீதிப் பிரதட்சணம், காலை 6.35மணி - 7.25 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் தொடர்ந்து எஜமான் அபிஷேகம் தசதர்சனம், ஆச்சார்ய சம்பாவனை, ஆசீர்வாதம், மஹாபிஷேகம், விஷேட பூஜை தொடர்ந்து மதியம் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) என்பன இடம்பெறும்.

## குருமார் விபரம்

### ஆசிவழங்கும் குருமணிகள்

**சிவஸ்ரீ வி. ஈஸ்வரக்குருக்கள்**
(பிரதம குரு, ஈழத்துச் சிதம்பரம் - காரைநகர்)

**சிவஸ்ரீ கு. சண்முகராஜக் குருக்கள்**
(பிரதமகுரு, பயிரிக்கூடல் முருகன் ஆலயம், காரைநகர்)

**சிவஸ்ரீ நா. பாலஸ்கந்தரூபக்குருக்கள்**
(பிரதமகுரு, மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம் - காரைநகர்)

### கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு

"சிவாகம ரத்னா"
**சிவஸ்ரீ சிவ. கிருஷ்ணாக்குருக்கள்**
(ஈழத்துச் சிதம்பரம் - காரைநகர்)

### சர்வசாதகாச்சாரியார்

வீணகானகுருபீட முதல்வர்
**சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்**
(சித்தங்கேணி)

### ஆலயகுருமணிகள்

**பிரம்மஸ்ரீ கு. சரவணபவானந்த சர்மா**
(காரைநகர்)

**பிரம்மஸ்ரீ ச. பிரதாப சர்மா**
(காரைநகர்)

### கும்பாபிஷேக உதவிக்குரு

"கிரியாசாகரம்"
**சிவஸ்ரீ பா. பாலகிருஷ்ணக்குருக்கள்**
(கொழும்புத்துறை)

### யாகசம்ரட்சகர்கள்

**பிரம்மஸ்ரீ ம. சுந்தரேஸ்வர சர்மா**
(காரைநகர்)

**பிரம்மஸ்ரீ சு. சுஜீவ சர்மா**
(காரைநகர்)

| மங்கள வாத்தியம் | கட்டட அமைப்பு | வர்ணப்பூச்சு | மின் இணைப்பாளர் | ஆசாரி |
|---|---|---|---|---|
| N. K. கணேசன் சந்திரப்பிரியன் குழுவினர் - (காரைநகர்) | ஸ்தபதி இ. தங்கேஸ்வரன் (அராலி) | இ. மதியழகன் (காரைநகர்) | க.கலைச்சந்திரன்(ரஞ்சன்) (காரைநகர்) | ச. விஜயரத்தினம் (காரைநகர்) |

அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதருவதோடு கிரியைகளுக்குத் தேவையான பால், தயிர், இளநீர், பூக்கள், பூமாலைகள், சமித்துவகை போன்ற அபிஷேகப் பொருட்களை வழங்கி வைரவப் பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொள்வீர்களாக.

**மண்டலாபிஷேகம் பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்**

**ஆலய நிர்வாகசபை**

சுபம்

Harikanan, Jaffna.